Washington State Health Care Authority

ஆப்பிள் ஹெல்த் (Apple Health) கிளையண்டுகளுக்கான தொலைசுகாதார வழிகாட்டி

COVID-19 சர்வதேச தொற்றின் போது கிடைக்கின்ற சேவைகள்

COVID-19 தொற்றுக்குப் பதில்வினையாக, சுகாதார பராமரிப்பு ஆணையம் (HCA) மற்றும் வாஷிங்டன் Apple Health (Medicaid) ஆகியவற்றால் நிர்வகிக்கக்கப்படும் பராமரிப்பு நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள், குடும்பங்கள் மற்றும் வழங்குநர்களுக்கு COVID-19 சர்வதேச தொற்றின் போது சுகாதார பராமரிப்புச் சந்திக்க பல்வேறு தொலைசுகாதார தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.

தொலைசுகாதரம் என்றால் என்ன?

தொலைசுகாதாரம் என்பது தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது வீடியோவைப் பயன்படுத்துகிற சுகாதார பராமரிப்பு வழங்குநர் மற்றும் நோயாளிகளுக்கு சுகாதார பராமரிப்பை வழங்குவதற்கான ஒரு வழியாகும்.

தொலைசுகாதாரத்திற்கு எனது வழங்குநருடன் நான் வருகைத் தரும்போது எனது தனிப்பட்ட சுகாதார பராமரிப்புத் தகவல்கள் பாதுகாக்கப்படுகிறதா?

தொலைசுகாதார வருகையின் போது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் ஊலம் உங்கள் சுகாதார பராமரிப்புத் தகவலைப் பாதுகாக்க நீங்களும் உங்கள் வழங்குநரும் உதவலாம். உங்கள் தகவலைப் பாதுகாப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் பற்றிய விருப்பங்களை நீங்கள் உங்கள் வழங்குநரிடம் விவாதிக்கலாம். இதில் தொலைபேசியை ஒரு தனிப்பட்ட அறை அல்லது இடத்தில் பயன்படுத்துவதும் அடங்கும். உங்கள் தனிப்பட்ட சுகாதார தகவல்களைப் பாதுகாப்பது பற்றி வரும்போது நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

நான் ஆப்பில் ஹெல்த்தில் (Apple Health) சேர்ந்துள்ளேன். நான் தொலைசுகாதாரம் பயன்படுத்தி சேவைகளைப் பெறலாமா?

ஆம். தொலைசுகாதாரம் பயன்படுத்தி நடத்தப்படும் சேவைகளை நீங்கள் பரந்த அளவில் பெறலாம். நபரே வருகைக்கு வருவதற்கு மாற்றாக தொலைசுகாதாரத்தைப் பயன்படுத்தி வழங்குநரைச் சந்திக்கும் விருப்பம் உங்களுக்கு உள்ளது. இதில் முதன்மைப் பராமரிப்பு வழங்குநர் அல்லது எந்த நிபுணருடனான வருகைகள்; வீட்டு சுகாதார வழங்குநர்; உடல், பேச்சு அல்லது தொழில் சிகிச்சை நிபுணர்; நடத்தைச் சுகாதார வழங்குநர்; பயன்பாட்டு நடத்தை ஆய்வாளர்; பல் மருத்துவர்; மற்றும் இவ்வாறு வழங்கப்படும் சேவைகளைப் பயன்படுத்த விரும்பும் வேறு எந்த வழங்குநரும் அடங்குவர்.

என் வழங்குநரிடம் இருந்து தொலைசுகாதார சேவைகளை நான் எவ்வாறு கோருவது?

உங்களுக்கு சுகாதார பராமரிப்புப் பிரச்சனை இருந்தால் அல்லது கொண்டிருக்கும் சுகாதார பிரச்சனைக்காகச் செல்ல வேண்டிய தேவையிருந்தால் ஒரு நியமனத்தைத் திட்டமிட உங்கள் வழங்குநரை அழைக்கவும். நீங்கள் நேரில் பார்வையிட வேண்டுமா, தொலைசுகாதார தொழில்நுட்பத்துடன் சந்திப்பது பொருத்தமானதா என்பதைத் தீர்மானிக்க உங்கள் வழங்குநர் கேள்விகளைக் கேட்பார், மேலும் தொலைசுகாதார சேவைகளை வழங்க உபகரணங்கள் வழங்குநரிடம் இருக்கிறதா என்று உங்களுக்குத் தெரிவிக்கலாம். தொலைசுகாதார நியமனங்கள் நேரில் சென்று பார்வையிடுவதைப் போலவே திட்டமிடப்படுகின்றன, மேலும் சந்திப்பு எவ்வாறு நடத்தப்படும் என்பதும் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். உதாரணமாக, "மருத்துவர் உங்களை வெள்ளிக்கிழமை அன்று மதியம் 2 மணிக்கு அழைப்பார்".

நீங்கள் வீட்டு சுகாதாரம், சிகிச்சை அல்லது நடத்தைச் சுகாதார சேவைகளுக்குத் தவறாமல் நியமனங்களைத் திட்டமிடுபவராக இருந்தால், இந்த நடக்கின்ற வருகைகளைத் திட்டமிடுவதற்கு உங்கள் வழங்குநர் உங்களுடன் பணியாற்றுவார்.

எனது தொலைசுகாதார சேவைகளைத் திட்டமிடுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் எனக்குத் தேவைப்பட்டால் என்ன ஆவது?

உங்கள் நியமனத்தைத் திட்டமிடும் போது மொழிப்பெயர்ப்பாளர் தேவையென்பதை உங்கள் வழங்குநரிடம் தெரிவியுங்கள். மேலும் தகவலுக்கு, hca.wa.gov/interpreter-services ஐப் பார்வையிடவும்.

எனக்குக் காப்பீடு இல்லை மற்றும் ஆப்பிள் ஹெல்த் (Apple Health) கவரேஜிற்கு இதுவரை விண்ணப்பித்ததில்லை. நான் தொலைசுகாதார சேவைகளைப் பெற முடியுமா?

நீங்கள் ஆப்பிள் ஹெல்த்திற்குத் (Apple Health) தகுதி பெற்றுள்ளீர்களா என்பதைப் பார்க்க நீங்கள் இலவச அல்லது குறைந்த-செலவு சுகாதார கவரேஜிற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்:

- **ஆன்லைன்**: wahealthplanfinder.org
- **தொலைபேசி**: 1-855-923-4633

ஆப்பிள் ஹெல்த் (Apple Health) கவரேஜ் மறுக்கப்பட்டால், COVID-19 பரிசோதனை மற்றும் சிகிச்சைப் பற்றி சமூக சுகாதார மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

தொலைசுகாதார நியமனத்திற்கு நான் எவ்வாறு தயாராவது?

- கவனிச்சிதறல்கள் இல்லாமல் ஒரு அமைதியான, தனிப்பட்ட இடத்தைத் தேர்வு செய்யவும்
- உங்கள் தொலைபேசி அல்லது கணினி சார்ஜ் செய்யப்பட்டிருப்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்
- குறிப்புகள் எடுக்க கையில் பேனா மற்றும் பேப்பர் வைத்துக் கொள்ளுங்கள்

புதுப்பிக்கப்பட்டது 5/20/20